
# அரண்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:8 Issue :31 July 2026*

கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief
**Dr PRIYAKRISHNAN**

Publisher
**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members
**Dr V SELVAKUMAR**
Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

**Dr. Ravindran A/L Maraya**
Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

**Dr Silllalee A/L S.Kandasamy**
Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

**Dr. S. KAVITHA**
School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**
Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

International e Journal of Tamil Research

## EDITORIAL BOARD

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

---

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com

---

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# தமிழ்



# நிகண்டுகளில் விளையாட்டுச் சொற்கள்
# *Words related to sports in Nikandus (lexicons)*

**முனைவர்த.சத்யா,** உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை, பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி,(த)
தஞ்சாவூர் -613006

***Abstract***

*Lexicons (Nighandus) play a vital role in preserving and enriching the vocabulary of the Tamil language. They are repositories of words that provide multiple meanings for a single term and list various words that share the same meaning. These lexicons help in understanding the meaning, usage, and associated terms of a word. They have served as significant cultural elements that foster health, morality, unity, and a spirit of valor in human life. Consequently, numerous terms related to various Tamil games-including their equipment, rules, and procedures-are found in Nikandus (traditional Tamil lexicons). This article examines the richness of vocabulary in these lexicons and the Tamil tradition of sports, supported by evidence.*

***Keywords:*** *Undattu, Orai, Keeridai, Kedavaral, Keli, Vilasanai, Thodalai, Pannai, Poythal, Vandal.*

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் மொழியின் சொல்வளத்தைப் பாதுகாத்து வளர்ப்பதில் நிகண்டுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஒரு சொல்லுக்குப் பல பொருள்களையும், பல சொற்களுக்கு ஒரே பொருளையும் வழங்கும் சொற்களஞ்சியங்களே நிகண்டுகள். ஒரு சொல்லின் பொருள், பயன்பாடு, இணைச்சொற்கள் போன்றவற்றை அறிய நிகண்டுகள் உதவுகின்றன. மனித வாழ்வில் உடல்நலம், ஒழுக்கம், ஒற்றுமை, வீர உணர்வு ஆகியவற்றை வளர்க்கும் முக்கியமான பண்பாட்டு கூறாக இருந்துள்ளது. அதனால், தமிழில் பல்வேறு விளையாட்டுகள், அவற்றின் கருவிகள், விதிமுறைகள் மற்றும் செயல்முறைகள் தொடர்பான ஏராளமான சொற்கள் நிகண்டுகளில் இடம்பெற்றுள்ளன. இக்கட்டுரையில் நிகண்டுகளின் சொல்வளச் சிறப்பும், தமிழர் விளையாட்டு மரபும் பற்றி சான்றுகளுடன் ஆராய்ந்தளிக்கப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** உண்டாட்டு, ஓரை, கீரிடை, கெடவரல், கேளி, விலாசணை, தொடலை, பண்ணை, பொய்தல், வண்டல்

***முன்னுரை:***

*தமிழ்மொழி உலகின் தொன்மை வாய்ந்த செம்மொழிகளில் ஒன்றாகும். அதன் இலக்கிய வளத்திற்கும், சொல்லாட்சி செழுமைக்கும் சான்றாக விளங்குபவை நிகண்டுகள். தமிழ்ச் சமூகத்தின் வாழ்க்கை முறை, பண்பாடு, அறிவியல், கலை,தொழில், சமயம், மருத்துவம், போர், கல்வி மற்றும் விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளில் பயன்பட்ட சொற்களை நிகண்டுகள் தொகுத்து சொல்கிறது. விளையாட்டு என்பது மனித வாழிவின் இன்றியமையாத அங்கமாகும். அது உடல் வலிமை, மனஉறுதி, ஒழுக்கம், ஒற்றுமை, போட்டி மனப்பான்மை மற்றும் சமூக நல்லிணக்கம் ஆகியவற்றை வளர்க்கும் பண்பாட்டுக் கூறாக விளங்குகிறது. தமிழர்களின் வாழ்வியலில் சங்ககாலம் முதல் பலவகையான விளையாட்டுகள் இடம்பெற்றிருந்த்தற்கான சான்றுகள் இலக்கியங்களிலும் நிகண்டுகளிலும் காணப்படுகின்றன. இதனடிப்படையில் நிகண்டுகளில் விளையாட்டுச் சொற்கள் என்ற தலைப்பில் நிகண்டுகளில் இடம்பெற்றுள்ள விளையாட்டுச் சொற்களின் வகைகள், பொருள், பயன்பாடு, சொற்பிறப்பு போன்றவற்றை ஆய்வதன் மூலம் தமிழியல் ஆராய்ச்சிகும் நிகண்டு ஆய்வுக்கும் புதிய பரிமாணத்தை அளிக்கும் என்பதில் ஐயமில்லை.*

**தொல்காப்பியதில் விளையாட்டு**

*ஆயின், கெடவரல், பண்ணை, ஓரை (விளையாட்டு) ஆகிய சொற்கள் தொல்காப்பியர் காலத்திலிருந்தே விளையாட்டு என்னும் பொருளை உணர்த்தி வந்தவை எனலாம்.*

*கெடவரல் என்ற சொல் பருவரல் (குறள். 1240)*

*தைவரல் (தொல்காப்பியம் 1208, 1209) என்னும் பாங்கில் அமைந்துள்ளது. வா என்பது துணை வினை.*

*பண்ணை என்பது விளையாடும் முறைமை வரையறுக்கப்பட்ட விளையாட்டு எனலாம். பண்படுத்தப்பட்ட நிலம் பண்ணை எனப்பட்டது. போலப் பண்படுத்தப்பட்ட செயல் அல்லது விளையாட்டு பண்ணை எனப்பட்டது எனலாம். பண்ணையில் மெய்ப்பாடுகள் தோன்றும் என்கிறார் தொல்காப்பியர் (1195) விதிகளுக்கு உட்பட்டு உணர்வு பொங்கி, திறத்தைக் காட்டி விளையாடும் பண்ணை விளையாட்டில் எண்வகை மெய்ப்பாடுகளும் தோன்றுவது இயல்பே.*

*ஓரை என்பது விளையாட்டு வகைகளில் ஒன்றென இந்நூல் குறிப்பிடக் காணலாம். எனவே, கெடவரல், பண்ணை ஆகியவை முறையே விதி முறையில்லாத, விதிமுறையுள்ள விளையாட்டுகளை உணர்த்தும் பண்டைக்காலச் சொற்கள் எனலாம். **(வேலாயுதம் பிள்ளை, தமிழ்மணி, சாமி, திருக்குறள் சொல்லாய்வு, 1952. ப. 153)***

'சிறுபாடு' என்பது எளிய செயல்களால் விளையாடப்படும் விளையாட்டு இக்காலப் புலிக்கோடு விளையாட்டு (சதுரங்க வகை) போன்ற விளையாட்டு சங்க காலத்தில் 'சிறுபாடு' என்ற சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ளது. ***(நற். 341)***

**விளையாட்டு**

***"மன மகிழ்ச்சியாகச் செய்யக்கூடிய எளிய அல்லது வேடிக்கையான செயல்களை விளையாட்டு எனலாம் என்கிறார்". (சு. சக்திவேல், தமிழக நாட்டுப்புற விளையாட்டுக்கள். ப.)***

விளையாட்டு என்பது வெளித்தூண்டல்களின்றி மகிழ்ச்சியூட்டும் செயல்களில் இயற்கையாக ஈடுபடுவதாகும். இவ்விளையாட்டு பொழுது போக்கிற்காக மட்டுமின்றி உடல் நலம், மனநலம் ஆகியவற்றைப் பேணுபவையாக அமைகின்றன.

**"விளையாட்டில் உடல் செயல்களின்றி உள்ளச் செயல்களும் இடம் பெறுகின்றன." என்று சு. சக்திவேல் குறிப்பிடுகின்றர்.**

விளையாட்டு மனதிற்கு மனநிறைவையும் உடலுக்கு புத்துணர்வையும் ஆறுதலையும் இன்பத்தையும் வெளிப்படுத்தும் விளைவாக அமைகின்றது.

உடல் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரியும் வகையில் அமைவதே விளையாட்டின் தலையாய நோக்கமாகும்.

**"விளையாட்டு என்பது ஒரு செயல் அதில் மனநிறைவு என்பது ஒரு பகுதி தன் ஆற்றலை வெளிப்படுத்தும் ஒரு பகுதியே விளையாட்டு என்று வ. பெருமாள் குறிப்பிடுகிறார்.**

**மேலும், "விளையாட்டு அதன் செயற்பாட்டிலே அமைதி, ஆறுதல், இன்பம் தருவது" என்று சிவகுருநாதன் குறிப்பிடுகிறார்.**

மதுரைத் தமிழ்ப்பேரகராதி விளையாட்டு என்பதற்கு,

**விளையாட்டுப் பொருள்**

> "ஆய கலைகள் அறுபத்தினான்கு என இந்தியச் சிந்தனையாளர் பகுத்தனர். அவற்றில் விளையாட்டுகளும் இடம் பெற்றுள்ளன. யானையேற்றம், குதிரையேற்றம், விற்போர், மற்போர் போன்றவை இவற்றில் அடங்கும்". ***(அ. சிவகாமசுந்தரி, சங்க இலக்கிய விளையாட்டுக் களஞ்சியம். ப.)s***

**நிகண்டு நூல்களில் விளையாட்டு**

சங்க காலத்திற்குப் பிற்பட்ட நிகண்டு நூல்கள் மேலே குறிப்பிட்ட கெடவரல், பண்ணை, ஓரை ஆகியவற்றுடன் உண்டாட்டு, உப்பு, கீரிடை, கேளி, தொடலை, பொய்தல், வண்டல், விலாசனை ஆகிய எட்டு சொற்களையும் கூட்டி விளையாட்டு என்னும் பொருளுணர்த்தும்

சொற்களாகக் குறிப்பிடுகின்றன. இவற்றை மகளிர் விளையாட்டு வகைகள் என நிகண்டுகள் குறிப்பிடுகின்றன.

இந்த எட்டில் வண்டல் விளையாட்டு சங்கப் பாடல்களில் பலபடப் பேசப்படுகிறது.

தொடலை விளையாட்டைத் திருக்குறள் (1135) குறிப்பிடுகின்றது எனலாம். பொய்தல் விளையாட்டு பற்றிச் சிலப்பதிகாரத்திலும் (1018) கேளி விளையாட்டைக் கலித்தொகையிலும் (56 கொல்லாடிக் காண்பேன்) காணலாம். உப்பு, உண்டாட்டு, விளையாட்டுகளைப் புறநானூற்றுப் பாடல்களில் அறியலாம்.

கீரிடை என்பது சங்க காலத்தில் அத்தி என்னும் விளையாட்டு வீரன் ஆற்று மடுவில் செய்து காட்டிய நீச்சல் நடனம் என்றும், விலாசனை என்பது குரவை, துணங்கை போன்ற ஆட்டங்கள் எனவும் கொள்ளத்தக்கவை.

**நிகண்டுகளில் விளையாட்டுச் சொற்கள்**

நிகண்டுகள் அகராதி அமைப்புடையன அல்ல, இவை பலவகைப் பொருட்புல வகைப்பாடு உடையனவாய் உள்ளன. ஒரு பொருட் பல சொற்கள் அனைத்தும் பொருட்புல அடிப்படையாக திரட்டித் தரப்பட்டுள்ளன.

அந்த வகையில் விளையாட்டுப் பொருள் குறித்த பல சொற்களை நிகண்டுகள் குறிப்பிட்டுள்ளன.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய நிகண்டுகளும் அதற்குப் பிறகு தோன்றிய நிகண்டுகளிலும் பண்டைய நாளில் வழங்கிய விளையாட்டுக் குறித்தச் சொற்கள் தொகுத்துக் குறிப்பிடப்பட்டுள்ளன.

சான்றாக, கி.பி. 9 - ஆம் நூற்றாண்டில் தோன்றிய சேந்தன் திவாகரம் மகளிர் விளையாட்டுகளை,

**"ஓரை பண்ணை கெடவரல் பொய்தல் உண்டாட்டு கீரிடை உப்பு கேளி**
**வண்டல் தொடலை மகளிர் விளையாட்டு விலாசனை என்பதும் அவர்**
**விளையாட்டே"(சேந். தி. 11)**

என்று குறிப்பிடுகின்றது. மேலும்,

கி.பி. 10 - ஆம் நூற்றாண்டில் தோன்றிய பிங்கல நிகண்டு ஓரை பண்ணை கெடவரல் பொய்தல் உண்டாட்டு கீரிடை உப்புக் கேளி வண்டலங் கோதை மகளிர் விளையாட்டோடு,

**"தொலையுந் தகுளமும் அவர்விளை யாட்டே"(பிங். 199)**

என்று குறிப்பிடுகின்றது. மேலும்,

கி.பி. 14 — ஆம் நூற்றாண்டில் தோன்றிய உரிச்சொல் நிகண்டு,

**"பண்ணை கெடவரல் ஓரை பொய்தல் இலை**
**வெண்ணகை யார் விளையாட்டு" (உ.நி. 13)**

என்றும்,

கி.பி. 16 — ஆம் நூற்றாண்டில் தோன்றிய சூடாமணி நிகண்டு,

**"தொடலை யுண்டாட்டு பொய்தல் சூல் வியானையே வண்டல்**
**கெடவரல் பண்ணை யுப்புக் கிரிடையே கேளியோரை**
**புடைமுலை யார் ஆடற்போர் பொழுது போக்கோபினோதம்**
**படி பாராட்டுதல்டு யாவல் பரிந்து கொண்டான் மெச்சல்ல"**

***(சூடா.61.3)***

என்றும்,

இவற்றுள் ஓரை என்பது மகளிராடுங் களத்தினைக் குறிப்பிடுவதாகும். என்பதை,

**"பைந்தொடி மகளிர் ஆடப்படுங்களம் ஓரையென்ப" (சூடா. 61.3)**

என்றும் கூறப்பட்டுள்ளது.மேலும் மகளிர் விளையாடு, விளையாட்டுகளில் வெறியாட்டு என்பதற்கு வெறி, கழங்கு, அணங்கு என்பதையும் கைத்தோல் என்பதற்குக் குரவை என்பதையும் கைகளை முடக்கிக் கொண்டு ஆடுவதற்கு துணங்கை என்பதையும்,

**"அடுத்திடும் வெறிக ழங்கோடு அணங்கு இவை வெறியாட்டின் பேர்**
**தொடுத்தகை கோத்தா டற்பேர் சொல்லிய குரவையென்ப**
**முடக்கிய விருகை தானும் பழுப்புடை முறையே யொற்றத்**
**துடக்கிய நடையினாள் துணங்கை யென்றியும் பல்ஆமே"**

**(சூடா. 52)**

என்று சூடாமணி நிகண்டு குறிப்பிடுகின்றது.

தமிழ் நிகண்டுகள் விளையாட்டுச் சொற்களாக ஆடற்போர், உண்டாட்டு, உப்பு, ஓரை, கீரிடை, கெடவரல், கேளி, விலாசணை, தொடலை, பண்ணை, புடமுடையார், பொய்தல், வண்டல் போன்ற சொற்களை குறித்துள்ளன.

மகளிர் விளையாட்டுச் சொற்களாக மதுரை தமிழ் பேரகராதி உண்டாட்டு, உப்பு, ஓரை, கெடவரல், தொடலை, பண்ணை, பொய்தல், வண்டல் என்பவற்றை குறிப்பிடுகிறது.

| | | |
|---|---|---|
| **சேந்தன் திவாகரம்** (கி.பி. 9 —ம் நூற்றாண்டு) | → | ஓரை பண்ணை கெடவரல் பொய்தல்<br>உண்டாட்டு கீரீடை உப்பு கேளி<br>வண்டல் தொடலை மகளிர் விளையாட்டு<br>விலாசனை என்பதும் அவர் விளையாட்டே |
| **பிங்கலம் நிகண்டு** (கி.பி. 10 ம் நூற்றாண்டு) | → | ஓரை பண்ணை கெடவரல் பொய்தல்<br>உண்டாட்டு கீரீடை உப்புக் கேளி<br>வண்டலங் கோதை மகளிர் விளையாட்டே |

தொலையுந் தகுளமும் அவர் விளையாட்டே

**உரிச்சொல் நிகண்டு** → பண்ணை கெடவரல் ஓரை
(கி.பி. 14 ம் நூற்றாண்டு) பொய்தல் இவை
வெண்ணகை யார்விளை
யாட்டாம்

**சூடாமணி நிகண்டு** → தொடலை உண்டாட்டுப்
(கி.பி. 16 ம் நூற்றாண்டு) பொய்தல் சூழ்
விலாசனையே வண்டல்
கெடவரல் பண்ணை உப்
புக் கீரீடையே
கேளி ஓரை புடைமுலையார்
ஆடற்பேர்

**முடிவுரை**

நிகண்டுகளில் இடம்பெற்றுள்ள விளையாட்டுச் சொற்கள் வெறும் சொற்களாக மட்டுமல்லாமல், தமிழர்களின் வாழ்வியல், உடற்கல்வி மரபு, பொழுதுபோக்கு, சமூக உறவுகள் மற்றும் பண்பாட்டு விழுமியங்களைப் பிரதிபலிக்கும் வரலாற்றுச் சான்றுகளாகவும் விளங்குகின்றன.

நிகண்டுகளில் காணப்படும் விளையாட்டுச் சொற்களை ஆய்வதன் மூலம், விளையாட்டுகளுக்கு வைக்கப்பட்ட பெயர்கள் காரணத்துடன் வைக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

தமிழர் விளையாட்டு மரபின் சிறப்பை வெளிப்படுத்துவதோடு, எதிகால நிகண்டு ஆய்வுகளுக்கும், தமிழியல் ஆராய்சிக்கும் புதிய வழிகாட்டுதலாக அமையும். தமிழ்மொழியின் சொல்லாட்சியையும், பண்பாட்டையும் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்லும் பணியில் இத்தகைய ஆய்வுகள் முக்கிய பங்களிப்பை வழங்கும் என்பது உறுதி.

**பார்வை நூல்கள்:**

1. சங்க இலக்கிய விளையாட்டுக் களஞ்சியம் — அ. சிவகாமசுந்தரி
2. தமிழக நாட்டுபுற விளையாட்டுகள் - சு. சக்திவேல்
3. பிங்கல நிகண்டு - தி. சிவன் பிள்ளை
4. மண்டல புருடரின் சூடாமணி நிகண்டு — ஆறுமுக நாவலர்
5. உரிச்சொல் நிகண்டு - காங்கேயர்

*Reference Books:*

1. *Sangam Ilakkiya Vilaiyattu Kalanjiyam — A. Sivakamasundari*
2. *Tamilaga Naattupura Vilaiyattukal — S. Sakthivel*
3. *Pingala Nigandu — T. Sivan Pillai*
4. *Mandala Purudar's Chudamani Nigandu — Arumuga Navalar*
5. *Urichol Nigandu — Kangeyar*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com